செய்தி வெளியீடு எண் : 358 நாள்: 09.03.2022

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், அரசின் திட்டங்கள், சாதனைகள், அரசு சார்ந்த செய்திகள், விழாப்பேருரைகள், புகைப்படங்கள் மற்றும் காணொலிக்காட்சிப் பதிவுகள், அரசாணைகள் அனைத்தும் உடனடியாக பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையால் சமூக ஊடகங்களான கீச்சகம்(Twitter), முகநூல்(FaceBook), படவரி(Instagram) மற்றும் வலையொளி(YouTube) ஆகியவற்றில் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. மேலும், சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கிய நிகழ்ச்சிகள் அனைத்தும் சமூக வலைத்தளங்களில் நேரடி ஒளிபரப்பும் செய்யப்பட்டு வருகிறது.

எனவே, பொதுமக்கள், உலகெங்கிலுமுள்ள தமிழர்கள், அனைவரும் செய்தி மக்கள் தொடர்புத்துறையால் தொடங்கப்பட்டுள்ள @TNDIPRNEWS(Twitter), tndipr(FaceBook), tndipr(Instagram), TN DIPR(YouTube) கணக்குகளை பின்தொடர்ந்து(Follow) தமிழ்நாடு அரசின் அன்றாட நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து பயன்பெறலாம் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9